தினமலர் : 11/2/2010

# ரூ.4,500 கோடி முதலீட்டில் சர்வதேச நிதி நகரம்

## அடுத்த மாதம் டெண்டர் விடப்படுகிறது

சென்னை, பிப். 11-

சென்னை அருகே அமையவுள்ள நிதி நகரத்துக்கு, மார்ச் மாதம், சர்வதேச டெண்டர் விடப்படுகிறது. நான்கு கோடி சதுர அடியில் அமைக்கப்படும் இந்த நிதி நகரம், 4,500 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும்.

கடந்த ஆண்டு பட்ஜெட் மீது நடந்த விவாதத்தின் போது, சென்னை அருகே நிதி நகரம், மீடியா மற்றும் கேளிக்கை பூங்கா அமைக்கப்படுமென, நிதியமைச்சர் அன்பழகன் அறிவித்தார்.

நிதி நகரம் என்பது, வர்த்தக வங்கிகளின் செயல்பாடுகள், முதலீட்டு வங்கிகள், சொத்து மேலாண்மை நிறுவனங்கள், பாரம்பரிய நிதிகள், கரன்சி பரிமாற்ற சேவைகள், இன்சூரன்ஸ் கம்பெனிகள் போன்றவற்றின் செயல்பாடுகள் கொண்டதாக இருக்கும்.

இதுதவிர, நிதி நிறுவனங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்யும் தகவல் தொழில்நுட்ப பொருட்கள் மற்றும் சேவை கம்பெனிகள், தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு நிர்வாகம் போன்றவற்றையும் கொண்டிருக்கும்.

மேலும், நிதி மேலாண்மை மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பயிற்சி மையங்கள், பணியாளர் பயிற்சி கல்லூரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கும் இடம் அளிக்கப்படும்.

மீடியா மற்றும் கேளிக்கை பூங்காவும் இதனுடன் அமைக்கப்படும். வேகமாக வளர்ந்து வரும் எலக்ட்ரானிக் மீடியா, சினிமா மற்றும் அவை தொடர்பான செயல்பாடுகளுக்கு இது பயன்படும். இதை அமைக்கும் பொறுப்பு, தமிழக அரசின், 'டிட்கோ' வசம் ஒப்படைக்கப்பட்டது.

சென்னை அருகே மேடவாக்கம் - பெரும்பாக்கம் சாலையில் இதை அமைக்க 187 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது.

இதில் 25 ஏக்கர் நிலம், மீடியா மற்றும் கேளிக்கை பூங்காவுக்கு பயன்படுத்த முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பாக பல்வேறு ஆலோசகர்களிடம் விவாதிக்கப்பட்டது. முதலில் இத்திட்டத்தை மேம்படுத்த, அனுபவம் வாய்ந்த குறிப்பிட்ட நிறுவனத்தை தேர்வு செய்து, 25 ஏக்கர் நிலத்தில் முதல்கட்டமாக வசதிகளை மேம்படுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

இதற்கான சர்வதேச டெண்டரை வடிவமைக்கும் பணி நடந்து வருகிறது. 300 பக்கங்கள் கொண்ட இந்த டெண்டர், வரும் மார்ச் மாதம் வெளியிடப்பட உள்ளது.

இதுதொடர்பாக, தொழில் துறை செயலர் ராஜிவ் ரஞ்சன் கூறியதாவது:

உலக வங்கி உட்பட பல சர்வதேச நிதி அமைப்புகள், சென்னையில் இருந்து உலகளவில் நிதிச் சேவையை மேற்கொண்டு வருகின்றன. தமிழகத்தில் அறிவுசார்ந்த மனித சக்தி அதிகம் உள்ளதால், இங்கு நிதி நகரம் அமைப்பது பெருமளவில் பயனளிக்கும்.

முதலில் இத்திட்டத்தை மேம்படுத்த, திறமை வாய்ந்த நிறுவனம் தேர்வு செய்யப்படும். திட்டத்தை செயல்படுத்த ஆலோசகர்கள் நியமிக்கப்படுவர். இதுடன், இத்திட்டத்துக்கான முழு அளவிலான மாஸ்டர் பிளான் தயாரிக்கப்படும்.

முதலில் விடப்படும் சர்வதேச டெண்டரில், எந்தளவு நிறுவனங்கள் முன்வருகின்றன, எவ்வளவு ஆர்வம் உள்ளது போன்றவை தெரியவரும். இத்திட்டம் ஆரம்பத்தில் 25 ஏக்கரில் துவக்கப்பட்டாலும், இதற்கு உள்ள வரவேற்பை பொறுத்து நீட்டிக்கப்படும்.

திட்டப்படி முழுமையான நிதி நகரம் ஏற்பட ஐந்து முதல் 10 ஆண்டுகளாகும். ஆண்டு வாரியாக இந்த நகரை முன்னேற்ற திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இந்நகரம் 4,500 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்து அமைக்கப்படும். நான்கு கோடி சதுர அடியில் கட்டடங்கள் அமையும்.

இவ்வாறு ராஜிவ் ரஞ்சன் கூறினார்.

தினத்தந்தி

11/2/2010

சென்னை அருகே அமையவுள்ள

# நிதி நகரத்தில் 25 ஏக்கரில் ஆரம்ப கட்டப்பணிகள் விரைவில் தொடக்கம்

## அடுத்த மாதத்தில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகிறது

சென்னை, பிப்.11–

சென்னை அருகே 187 ஏக்கரில் அமையவுள்ள நிதி நகரத்தில், 25 ஏக்கர் நிலத்தில் ஆரம்ப கட்டப்பணிகள் விரைவில் தொடங்கப்படுகின்றன. இதற்காக சர்வதேச டெண்டர், மார்ச் மாதத்தில் கோரப்படவுள்ளது.

### நிதி நகரம்

சென்னை அருகே தனியார் பங்கேற்புடன் நிதி நகரம் (பைனான்ஸ் சிட்டி) அமைக்கப்படும் என்று கடந்த பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. வங்கிகள், காப்பீட்டு நிறுவனங்கள், மியூச்சுவல் பண்ட் நிறுவனங்கள், பங்குச்சந்தை வர்த்தகர்கள் ஆகியோரை தமிழ்நாட்டுக்கு ஈர்க்கும் வண்ணம் இந்த நிதி நகரம் அமைக்கப்படும்.

அதன்பிறகு, சென்னை அருகே மேடவாக்கம்–பெரும்பாக்கம் சாலையில் உள்ள ஒரு இடத்தை; துணை முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்று பார்வையிட்டு தேர்வு செய்தார். தற்போது, அங்கு பணிகள் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இதற்கான அரசாணையும் சமீபத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக தொழில் துறை முதன்மை செயலாளர் ராஜீவ் ரஞ்சன் நேற்று கூறியதாவது:–

### 187 ஏக்கரில் ...

உலகளவில் உள்ள நிதித்துறை சார்ந்த நிறுவனங்களை தமிழகத்துக்கு ஈர்ப்பதற்காக, சென்னை அருகே 187 ஏக்கரில் நிதி நகரம் அமைக்க நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் நிதி நகரம் மற்றும் தகவல் ஊடக பொழுது போக்கு மையமும் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி நகரத்தில் வர்த்தக வங்கிகள், நிதி நிறுவனங்கள், சொத்து நிர்வகிக்கும் நிறுவனங்கள், முதலீட்டு நிறுவனங்கள், கரன்சி பரிமாற்ற நிறுவனங்கள், இன்சூரன்ஸ், பங்குச்சந்தை நிறுவனங்கள் மற்றும் அந்த துறை தொடர்புடைய நிறுவனங்கள் தமது அலுவலகங்களை அமைக்கும்.

இதுதவிர, தகவல் தொழில் நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப மேலாண்மை போன்ற நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் அங்கு வருவார்கள். இதுதவிர, அலுவலர் பயிற்சி மையங்கள், நிதி தொடர்பான கல்வி நிறுவனங்களும் அங்கு அமையும்.

### தயாராகிறது மாஸ்டர் பிளான்

இப்போதெல்லாம், சர்வதேச வங்கிகள் கூட சென்னையில் இருந்துதான் தங்கள் கணக்கு வழக்குகளையெல்லாம் கையாண்டு வருகிறது. அதுபோன்ற நிறுவனத்தினர், நிதி நகரத்தில் அலுவலகங்களை ஆர்வத்துடன் அமைப்பார்கள். இதுதவிர, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு தொடர்பான துறைகளும் இங்கு அமையும். உதாரணத்துக்கு, போர்ட் நிறுவனம், சென்னையில் உள்ள ஆலையில் வழங்கும் வேலை வாய்ப்பைவிட, அது தனியாக வேறிடத்தில் அமைத்துள்ள ஆராய்ச்சி மையத்தில், இருமடங்கு அதிக வேலை வாய்ப்பை அளித்துள்ளது. இதுபோன்ற அறிவுசார்ந்த வர்த்தக நிறுவனங்களும் நிதி நகரத்தில் தொழில் தொடங்கும். அப்போது கணிதம், அறிவியல் படித்த பட்டதாரிகளுக்கு ஏகப்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாகும்.

நிதி நகரம் அமைப்பதற்கு எத்தகைய நிறுவனங்கள் வரும், அவர்களுக்கு என்னென்ன தேவைப்படும் என்பதையெல்லாம் பற்றி விரிவாக ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்படவுள்ளது. இப்பணி, தனியார் நிறுவனத்தின் பொறுப்பில் விடப்படும். நிதி நகரத்தை பொறுத்தவரை பல்வேறு கட்டங்களில் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்கான ஆய்வுகள், திட்டமிடுதல், நிறுவனங்கள் தேர்வு செய்தல் போன்ற பணிகளை அரசு நிறுவனமான டிட்கோ, தனியார் பங்கேற்புடன் மேற்கொள்ள அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. நிதிநகரத்தில் முதல்கட்டமாக, 25 ஏக்கர் நிலத்தில் கட்டுமான பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கான கட்டமைப்பு வசதிகளை செய்யும் நிறுவனத்தை தேர்ந்தெடுக்க, வரும் மார்ச் மாதத்தில் உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளது. முதல்கட்ட பணிகள், முடிவடைந்ததும், அங்கு தொழில் தொடங்க வரும் நிறுவனங்களை பார்த்து, அதன்பிறகு அடுத்த கட்டப்பணிகள் தொடங்கப்படும்.

இவ்வாறு ராஜீவ் ரஞ்சன் தெரிவித்தார்.

### பொழுதுபோக்கு நகரம்

இதுபோல் அங்கு, பொழுது போக்கு நகரமும் இந்த இடத்தில், 25 ஏக்கர் பரப்பில் அமைக்கப்படவுள்ளது. அதில், அனிமேஷன், திரைப்பட–வீடியோ ஸ்பெஷல் எபெக்ட்ஸ், தொலைக்காட்சி ஸ்டுடியோ, திரைப்பட ஸ்டுடியோக்கள், ரெக்கார்டிங் ஸ்டுடியோ போன்ற பல்வேறு தொழில்கள் தொடங்கப்படவுள்ளது. இந்த இடத்தில் வசதிகளை உருவாக்கவும், தனியார் நிறுவனம் விரைவில் தேர்வு செய்யப்படவுள்ளது.

## சென்னை–பெங்களூருக்கு புல்லட் ரெயில்?

தொழில்துறை செயலாளர் ராஜீவ் ரஞ்சன் கூறுகையில், "ஜப்பான் நாட்டில் இருந்து பல்வேறு குழுக்களாக வந்த 90 பேர் என்னை ஒரேநாளில் சந்தித்தார்கள். சென்னையில் தொழில் தொடங்க அவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள். அப்போது, சென்னை–பெங்களூர் இடையே அதிவேக புல்லட் ரெயில் இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி விவாதிக்கப்பட்டது. இதன்மூலம் 2 மணி நேரத்தில் பெங்களூரை அடையலாம். இவ்வாறு புல்லட் ரெயில் தடம் அமைக்கும் போது, அதன் இருபுறத்திலும் 100 மீட்டர் தூரத்துக்கு இடங்களை கையகப்படுத்தி, அந்த பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த முடியும்" என்று தெரிவித்தார்.

The Hindu : 11/2/2010

# Plan for Media and Entertainment Park

T. Ramakrishnan

- Digital post-production, animation thrust areas
- Suggestion to set apart 25 acres for the Park

CHENNAI: Having drawn up the broad contours of the proposed Financial City in Sholinganallur and Perumbakkam villages on the southern fringes of the city, the State government has decided to develop a Media and Entertainment Park there.

At present, 187.4 acres have been earmarked for the Financial City project. The Tamil Nadu Industrial Development Corporation (TIDCO), the nodal agency for the project, has suggested that the government set apart 25 acres for the Media and Entertainment Park, according to Rajeev Ranjan, Principal Secretary to the State Industries Department.

The Park project is aimed to stimulate local demand and is likely to attract businesses from within and outside the country and create employment opportunities. Its thrust areas will be digital post-production, animation and manpower development. The Park will house integrated post-production complexes, animation zones, broadcasting and motion capture and visualisation studios, media management centres and flexible assembly sets and so on.

TIDCO has identified a site on the Medavakkam-Perumbakkam road, about 500 metres from Rajiv Gandhi Salai (Old Mahabalipuram Road), for the Financial City. Deputy Chief Minister M.K. Stalin inspected the site in September.

The Financial City is meant to provide space in a compact area for a host of organisations such as commercial banks, investment banks, insurance firms, non-banking financial companies, mutual fund and hedge fund companies, besides stock and commodity exchanges. It will accommodate training centres, staff training colleges and educational institutions such as the Institute for Financial Management and Research, the National Institute of Bank Management and the National Institute of Securities Markets.

The official emphasised that the government would not like to impose its ideas on the prospective developer of the proposed city. It has only chalked out the framework.

In December 2009, the government issued an order authorising TIDCO to identify joint venture partners, co-developers and other occupants of the Financial City and Media Park. Initially, the Financial City project may be developed over an area of about 25 acres. Depending on the response, it will be executed in a phased manner. If the response is overwhelming, the government may even extend the project area by 500 acres, says Mr. Rajeev Ranjan.

### Bids

Next month, the Corporation will float bids to prepare a master plan for the Financial City and conduct studies on the Media and Entertainment Park. In the first week of March, the Board of Directors of TIDCO will meet and finalise the bid document.

# Tidco to float global tenders for proposed financial city

TIMES NEWS NETWORK

**Chennai:** The Tamil Nadu Industrial Development Corporation (TIDCO) will float a global tender next month to launch the first phase of the proposed financial city, a dream project of deputy chief minister MK Stalin coming up in about 25 acres, close to the IT corridor.

The tenders will be floated in March to select a reputed promoter with the expertise to develop and market the first facility in about 25 acres and to engage consultants to conduct studies and formulate the development of the project, said Rajeev Ranjan, state industries secretary.

The competitive global bidding will mark the beginning of work for the financial city, one of the most ambitious projects of the government, aimed at attracting investments worth several thousand crores of rupees. TN will be banking mainly on its human resources.

After making an announcement on the financial city in the budget session of 2009-10, Stalin selected in last September 187.40 acres in Sholinganallur and Perumbakkam as ideal sites due to its suitability and connectivity.

In December, the state authorised TIDCO to implement the financial city and media and entertainment projects in the 187-acre complex. TIDCO's board meeting in the first week of March will finalise the tender details. A master plan for development of the city is also being prepared.